
கீரீப்பிள்ளையும் மந்திர விசிறியும்

ஜப்பானிய நாட்டுப்புற கதை

டோனி ஜான்ஸ்டோன்

தமிழில் கிருஷ்ணன்





கீரீப்பிள்ளையும் மந்திர விசிறியும்

ஜப்பானிய நாட்டுப்புற கதை

டோனி ஜான்ஸ்டோன்

தமிழில் கிருஷ்ணன்

டேங்கு என்று அழைக்கப்படும் சமூகம் ஜப்பானின் குட்டை மனிதர்கள் ஆவார்கள். அவர்களை எளிதாக அடையாளம் கண்டு கொள்ள முடியும். ஏனென்றால் நீண்ட மூக்கை உடையவர்கள் அவர்கள்.

ஒரு முறை டேங்கு குழந்தைகள் ஒரு மந்திர விசிறியை வைத்து விளையாண்டு கொண்டிருந்தார்கள். ஒரே சிரிப்பும் கும்மாளமாக இருந்தது.

அந்த விசிறியை வைத்து ஒரு பக்கம் விசிறும் போது அந்த பக்கம் உள்ள மூக்கு நீண்டு கொண்டே செல்லும். மற்றொரு பக்கம் வீசும் பொது மற்றொரு பக்கம் நீண்டு கொண்டே செல்லும். நீண்ட மூக்கு ஒருபுறமும், சாதாரண மூக்கு மற்றொருபுறமும் பார்ப்பதற்கே கேலியாக இருக்கும்.

ஹா ஹா ஹா ஹை.. ஹா ஹா ஹா ஹை.. நேரம் போவதே தெரியாமல் எல்லோரும் விளையாடி கொண்டு இருப்பார்கள்.



ஒரு கீரிப்பிள்ளையும் அந்த விளயாட்டை பார்த்து கொண்டிருந்தது.
“ஹா ஹா” நானும் இந்த விளையாட்டை விளையாடினால் எவ்வளவு சந்தோசமாக இருக்கும். எப்படியாது அந்த மந்திர விசிறியை எடுத்து விட வேண்டும் என்று நினைத்தது.

ஜப்பானின் கீரிப்பிள்ளைகளுக்கு தாம் நினைக்கும் தோற்றத்தை அடைய கூடிய சக்தி இருந்தது. அதனால் அந்த கீரிப்பிள்ளை ஒரு சிறு பெண்ணாக மாற்றம் கொண்டது. ஒரு தட்டு நிறைய இனிப்பு தின்பண்டங்களை எடுத்து கொண்டு டேங்கு குழந்தைகளிடம் சென்றது.



"வணக்கம் குழந்தைகளே" என்று பெண்ணாக வேடம் கொண்ட கீரிப்பிள்ளை கூறியது. “நானும் உங்களோடு விளையாடலாமா ? உங்களுக்கு இனிப்பு தின்பண்டங்கள் நிறையவே கொண்டு வந்திருக்கிறேன் என்றது”. டேங்கு குழந்தைகளுக்கு தின்பண்டங்களை பார்த்தவுடனேயே வாய் ஊற ஆரம்பித்து விட்டது.



இனிப்பு தின்பண்டமோ நான்கு இருந்தது. ஆனால் மூன்று குழந்தைகளே இருந்தனர். அதனால் யாருக்கு அதிகமாக கிடைக்க வேண்டும் என்ற வாக்கு வாதம் வந்தது.

"சரி ஒரு விளையாட்டு விளையாடலாமா உங்கள் கண்ணை கட்டி கொண்டு நன்றாக மூச்சை இழுத்து பிடியுங்கள். யார் அதிக நேரம் மூச்சை இழுத்து பிடிக்கிறார்களோ அவர்களுக்கு அதிகமான தின்பண்டங்கள் கிடைக்கும் என்றது" தந்திரமான கீரிப்பிள்ளை.

ஐ ! இது நல்ல விளையாட்டாக இருக்குதே !



ஆசை யாரை விட்டது ! இனிப்பு மீது இருந்த ஆசையில் டேங்கு குழந்தைகளும் விளையாட தொடங்கினர்.

மூக்கை இழுத்து பிடித்து கொண்டனர். கண்ணையும் மூடி கொண்டனர்.. அப்போது தந்திரமான கீரிப்பிள்ளை மனதில் சிரித்து கொண்டே மெதுவாக அந்த மந்திர விசிறியை எடுத்து கொண்டு நழுவியது.



கீரிப்பிள்ளை மீண்டும் தன்னுடைய உருவத்துக்கே மாறியது.
என்ன மடையர்கள் என்று நினைத்து கொண்டே நகரத்தை
நோக்கி சென்றது.
வரும் வழியில் ஒரு கோவிலுக்கு வந்து சேர்ந்தது கீரிப்பிள்ளை
. உள்ளே ஒரு அழகான பெண் அழகான ஆடைகள் அணிந்து
உட்கார்ந்திருந்தாள். அவளுடைய அப்பா மிகவும் பணக்காரராக
இருக்க வேண்டும் என நினைத்தது கீரிப்பிள்ளை.

ஹா.. ஹா.. என்று மனதில் ஏதோ நினைத்து கொண்டு "இப்போ பாரு விளை
யாட்டை !“
இரகசியமாக அந்த பெண்ணின் ஒரு பக்கமாக சென்ற கீரிப்பிள்ளை அவள்
மூக்கை நோக்கி மந்திர விசிறியை கொண்டு விசிறியது. அவ்வளவு தான்
புஸ்.. புஸ்.. புஸ்.. னு! மூக்கு நீண்டுகிட்டே போச்சு. நீண்டு கிட்டே !
என்ன ஒரு விசித்திரமாக இருந்தது பார்க்கவே.
அந்த பெண் பயந்து போய் கதறினாள்.



பாவம் அந்த பெண். தன்னை மறைத்து கொண்டு அழுது அழுது தேம்பினாள்.

அவளுடைய அப்பாவோ என்ன செய்வது என்று அறியாமல் புலம்பி தள்ளினார். ஆனால் இப்படி புலம்பினால் நீண்ட மூக்கு குறையவா போகுது ?



அந்த பெண்ணின் அப்பா ஜப்பானில் இருந்த சிறந்த மருத்துவர்களை அழைத்தார். "காய்ச்சல், அம்மை போன்ற நோய்களை குணப்படுத்தும் மருத்துவர்கள் இதை சரி செய்ய முடியாதா" என்று மனதில் நினைத்தார்.



வந்த மருத்துவர்களோ ஒவ்வொருவரும் ஒரு வைத்தியம் சொன்னார்கள்.
ஒருவர் சொன்னார் "இந்த சூரணத்தை சாப்பிட்டால் சரியாகி விடும்" என்று. இன்னொருவர் சொன்னார் "கடற்பாசியை தின்றால் சரியாகிவிடும் என்று." மூன்றாமவர் சொன்னார் "முட்டை கோஸை நிறைய தின்றால் சரியாகி விடும் என்று". "முட்டை கோஸ் மட்டும் தான் வைத்தியம்!"

அந்த பெண்ணும் எல்லாவற்றையும் தின்றால் . சூரணம், கடற்பாசி, நிறைய முட்டை கோஸ் ஆனால் அவள் மூக்கோ நீட்டியது நீட்டிய படியே இருந்தது. குறையவே இல்லை.





முட்டாள்களே முட்டாள்களே.. வாங்க உங்க வாயை முட்டை கோசாலேயே அடைக்கிறேன்” என்று அவர்கள் மூஞ்சிலேயே தூக்கி எறிந்தார். எல்லோரும் பயந்து ஓடியே விட்டனர் .

அடுத்து அந்த ஊரில் இருந்த மந்திரவாதி கிழவியை அழைத்தார். அவள் எந்த ஒரு செய்வினையையும் போக்கிடுவாள். மீனையும் தங்கமாக மாத்தும் சக்தி உடையவள். "அவளால் என் பெண்ணின் மூக்கை சரி செய்ய முடியாமலா போய் விடும்" என்று நினைத்தார்.



மந்திரவாதி கிழவியும் வந்தாள். "இது ஒரு சிறு பிள்ளை விளையாட்டு எனக்கு மிளகு கொண்டு மூக்கில் தூவி தும்மியே மூக்கை குறைத்து விடுவேன்" என்றாள். ஹூம் ஹூம்...   ஒன்றும் நடக்கவில்லை.

பெண்ணின் அப்பாவுக்கோ வெறுத்தே போய் விட்டது . கோபத்தில் அந்த மிளகை கிழவியின் மேல் தெளித்து விட்டார் . "ஐயோ ஐயோ.." என்று தும்மி கொண்டே ஓடி விட்டாள் கிழவி.





அதற்கு பிறகு அந்த பெண்ணின் அப்பா ஜப்பானில் உள்ள மிக சிறந்த சிந்தனையாளர்களை அழைத்தார். ஒருவர் சொன்னார் "மகளின் மூக்கை கயிற்றால் முடிச்சி போட்டு கட்டவேண்டும்" என்று. சொன்னார் "முடிச்சி போடுவதை விட கட்டி தொங்க விடுவது தான் அழகாக இருக்கும் என்றார் இன்னொருவர்.


"கட்டி தொங்க விடுவாயா! உங்களை எல்லோரையும் கட்டி தொங்க விடுகி றேன் பார்" என்று அவர்களை விரட்டி அடித்து விட்டார் அந்த பெண்ணின் அப்பா.



ஒன்னுமே செய்யமுடியாதா என்ற எண்ணத்தில் அழ தொடங்கி விட்டார். “என் மகளின் மூக்கை யார் சரி செய்கிறாரோ அவருக்கு என் மகளையும், சொத்தில் பாதியையும் தருகிறேன்” என்று கத்தி அழுதார். இதை கேட்ட கீரிப்பிள்ளைக்கு ரொம்ப சந்தோசமா போச்சு.
ஹோ.. ஹோ.. இது தான் தனக்கு கிடைத்த வாய்ப்பு என்று நினைத்து கொண்டு
வேக வேகமாக அந்த பெண்ணின் அப்பாவின் அருகில் சென்றது. “நான் மூக்கை சரி செய்கிறவன்” என்று கூறியது.

மந்திர விசிறியை கொண்டு போய் அந்த பெண்ணின் ஒரு பக்கமாக நின்று கொண்டு விசிறியது கீரிப்பிள்ளை. புஸ்.. புஸ்.. புஸ்.. என்று மீண்டும் மூக்கு சுருங்கிஅதன் பழைய அளவிற்கே வந்து விட்டது!





பெண்ணின் அப்பாவுக்கோ சந்தோசம் தாங்க முடியவில்லை. தடபுடலான கல்யாண விருந்து ஏற்பாடு செய்தார். ஒரு பணக்கார அழகான பெண் தனக்கு மனைவியாக வர போவதை
நினைத்த கீரிப்பிள்ளைக்கோ தலை கால் புரிய வில்லை. விருந்தில் எல்லா உணவையும் ஒரு கட்டு கட்டி விட்டது. சாப்பிட்ட போதையில் தூக்கம் வந்து விட்டது.




சிறிது நேரத்திலேயே கீரிப்பிள்ளை ஆழ்ந்த உறக்கத்தில் கொர்.. கொர்.. என குறட்டை விட்டு கொண்டிருந்தது.



அதே நேரத்தில் டேங்கு குழந்தைகள் தங்களுடைய மந்திர விசிறியை திருடி சென்ற தந்திர கீரிப்பிள்ளையை தேடி கொண்டிருந்தனர். வீடு, கோவில், மாளிகை என்று எல்லா இடத்திற்கும் தேடி சென்றனர்.

கீரிப்பிள்ளையின் குறட்டை ஊருக்கே கேட்டு கொண்டிருந்தது. எதேச்சையாக அங்கு வந்து சேர்ந்த டேங்கு குழந்தைகள் எங்கிருந்து குறட்டை வருதுன்னு எட்டி பார்த்தால் நம்ம தந்திர கீரிப்பிள்ளை தான். ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தது. கொர்.. கொர்.. கொர்..




டேங்கு குழந்தைகள் சத்தம் போடாமல் அந்த மந்திர விசிறியை எடுத்து ஒரு பக்க மூக்கின் பக்கமாக விசிறினார்கள்.



புஸ்.. புஸ்.. புஸ் என்று மூக்கு எப்படி நீண்டுகிட்டே போச்சு.





மூக்கு மேலே வளர வளர டேங்கு குழந்தைகளுக்கு ஒரே மகிழ்ச்சி. கீரிப்பிள்ளையின் குறட்டை யோ நின்ற பாடில்லை.

கூரையை உடைத்து கொண்டு மூக்கு வளர்ந்து கொண்டிருந்தது. மேகங்களை தாண்டி சென்று விட்டது.



மேகங்களுக்கு மேலே வானத்தில் வாழும் மக்கள் ஒரு பாலம் கட்டி கொண்டிருந்தார்கள். திடீரென ஒரு கம்பு போன்ற ஒன்று வானை நோக்கி வருவதை பார்த்து கத்தினார்கள் . “பாருங்கள் பாருங்கள் ! இந்த பாலத்தை தாங்க கூடிய கம்பு இது தான். பிடியுங்கள் ! அதை கட்டி விடலாம்” என்று கத்தினார்கள்.
அப்படியே கீரிப்பிள்ளையின் மூக்கை பிடித்து கட்டி விட்டார்கள்.
மூக்கை யாரோ இழுப்பது போன்று உணர்ந்த கீரிப்பிள்ளை அலறி கொண்டு எழுந்தது.
"ஐயோ ஐயோ ஐயோ.. காப்பாத்துங்க காப்பாத்துங்க!" என்று கத்தியது கீரிப்பிள்ளை

மந்திர விசிறியை கொண்டு தன் மூக்கை குறைக்கலாம் என்று அதை தேடியது. ஆனால் டேங்கு குழந்தைகள் அதை எப்போதோ எடுத்து சென்று விட்டனர்.
“இழுங்க இழுங்க” என்று வானத்தில் இருந்த மக்கள் கத்தினார்கள்
“ஐயோ ஐயோ” என்று கீரிப்பிள்ளை கத்தி கொண்டிருந்தது.
அதற்கு பின் கீரிப்பிள்ளையை யாருமே பார்க்கவில்லை .
அதை வானத்தில் இழுத்து கட்டிவிட்டனர்.

